## விண்மீன் நடப்பு நிகழ்வுகள்

1] சமீபத்தில் செய்திகளில் காணப்பட்ட GSAT-31 செயற்கைகோள், எந்த இடத்தில் இருந்து விண்ணில் ஏவப்பட்டது?

[A] பிரெஞ்ச் குனியா

[B] ஸ்ரீஹரிகோட்டா

[C] ப்ளோரிடா

[D] மாஸ்கோ

- ✓ பிப்ரவரி 6, 2019ல் ஐரோப்பிய நிறுவனமான Arianspace-ன் ஏவுகணை மூலம் பிரெஞ்ச் குனியாவிலிருந்து இந்தியாவின் தகவல் தொடர்பு செயற்கைக்கோள் 'GSAT-31' வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டது. Ariane-5 Vehicle (Flight VA247) ராக்கெட்டில் சவுதியின் புவிநிலை செயற்கைக்கோள் 'Helas Sat4' உடன் சேர்த்து 'GSAT-3' ம் விண்ணில் ஏவப்பட்டது.
- ✓ 42 நிமிட பயணத்திற்கு பிறகு Ariane-5 ராக்கெட்டிலிருந்து GSAT-31 நீள்வட்ட Geosynchronous Transfer Orbit(GTO)-ல் 250 கிமீ perigee(பூமிக்கு அருகில் உள்ள புள்ளி) 35850 கிமீ apogee(பூமிக்கு தொலைவில் உள்ள புள்ளி) மற்றும் பூமத்திய ரேகைக்கு 3.0 டிகிரி கோணத்தில் பிரித்து விடப்பட்டது.
- ✓ Ariane-5 லிருந்து பிரிக்கப்பட்ட GSAT-31 ன் இரண்டு கலன்கள் ஒன்றன்பின் ஒன்றாக அமர்த்தப்பட்டன மற்றும் இஸ்ரோ நிறுவனத்தின் கர்நாடகத்தில் உள்ள Master Control Facility அதனை தங்கள் கட்டுப்பாட்டுக்கு கொண்டு வந்தனர்.
- ✓ GSAT-31 Ku-band உடன் கூடிய அதிக ஆற்றல்வாய்ந்த தகவல் தொடர்பு செயற்கைக்கோள் ஆகும். இதன் மூலம் இந்தியாவில் தகவல் தொடர்பு மேம்படும். 15 வருடங்கள் வரை செயல்படக்கூடியது. ஏற்கனவே வயதாகி உள்ள இன்சாட்-4CR செயற்கைக்கோளுக்கு பதிலாக GSAT-31 செயல்படும். மேலும் GSAT-31 இந்தியாவின் 40வது தகவல் தொடர்பு செயற்கைக்கோள் ஆகும்.

2] சமீபத்தில் காலமான லடு கிஷோர் ஸ்வெயின், ஒடிசாவின் எந்த மக்களவை தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினர் ஆவார்?

[A] அஸ்கா

[B] கியோஞ்சர்

[C] ஜகத்சிங்பூர்

[D] சுந்தர்கார்

- ✓ பிஜி ஜனதா தல்(BJD) கட்சியின் மூத்த தலைவர் லடு கிஷோர் ஸ்வெயின்(71) கடந்த பிப் 5,2019 அன்று புவனேஸ்வரில் காலமானார். இவர் மே 2014 இல் 16வது மக்களவைக்கு ஒடிசாவின் அஸ்கா தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர் ஆவார்.

3] மகாராஷ்டிர மாநில அரசு, பழங்குடி மக்களுக்கான நலத்திட்டங்களை மேற்பார்வையிட அமைத்த குழுவின் தலைவர் யார்?

[A] விவேக் பண்டித்

[B] வசன்ட்ராவ் மோரே

[C] ஏ டி நானா பட்டில்

[D] சுதாகர் வாக்

- ✓ மகாராஷ்டிர மாநில அரசு, பழங்குடி மக்களுக்கான பல்வேறு நலத்திட்டங்களை மேற்பார்வையிட 17 பேர் கொண்ட குழு ஒன்றை அமைத்தது.
- ✓ முன்னால் MLA மற்றும் ஷ்ரம்ஜீவி சங்கத்தின் தலைவரான விவேக் பண்டித் இக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார். இக்குழு பழங்குடி மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள வேலைவாய்ப்பு, குறைந்தபட்ச ஊதியம் மற்றும் வாழ்வாதார வசதிகள் பற்றி ஆய்வு செய்யும்.
- ✓ அரசு உத்தரவின்படி, பழங்குடி மக்களின் குழந்தைகள் கல்வியில் பின்தங்காமல் இருப்பதற்கான வழிமுறைகளை இக்குழு பரிந்துரைக்கும். இந்த குழு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை சந்தித்து அதன் பரிந்துரைகளை அரசிடம் கொடுக்கும்.

4] 30 ஆவது தேசிய சாலை பாதுகாப்பு வாரத்தின் கருப்பொருள் என்ன?

[A] Your Security, Safeguards your Family- Be warned on the Roads

[B] Road Security a Goal, Not an Intermission

[C] Sadak Suraksha - Jeevan Raksha

Winmeen.com

[D] Walk for Road Security

- ✓ பிப் 4 அன்று சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை துறை அமைச்சகம் நியூடெல்லியில் 30 ஆவது தேசிய சாலை பாதுகாப்பு வாரம்(NRSW-2019) துவக்கி வைத்தது. மக்களிடையே போக்குவரத்து விதிகள் பற்றிய விழிப்புணர்வுகளை பரப்புவதற்காகவும் விபத்துக்களின் மூலம் ஏற்படும் உயிர் இழப்புகளை குறைப்பதற்காகவும் இந்த வாரம் கடைபிடிக்கப்படுகிறது. இதன் கருப்பொருள் 'Sadak Suraksha-Jeevan raksha' ஆகும்.
- ✓ ராஜ்காட்டில் உள்ள காந்தி ஸ்மிருதி மற்றும் தர்ஷன் ஸ்ருதியில், உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் மற்றும் சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை துறை அமைச்சர் நிதின் கட்கரி ஆகியோர் காந்தியின் 150வது பிறந்த ஆண்டு நிறைவு விழாவை கொண்டாட மோட்டார் ஊர்தி பேரணி ஒன்றை துவக்கி வைத்தனர்.
- ✓ மோட்டார் பேரணி இந்தியா,வங்கதேசம் மற்றும் மியான்மர் ஆகிய நாடுகளில் காந்திஜிக்கு வரலாற்று தொடர்புள்ள இடங்களில் சுமார் 7,250 கிமீ சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ளது. இப்பேரணி மியான்மரின் யாங்கன் பகுதியில் வரும் பிப்ரவரி 24 அன்று முடிவுற உள்ளது.

5] எந்த அமைச்சகம் Shehri Samridhi Utsav திட்டத்தை தொடங்கியது?

[A] ஆரோக்கியம் மற்றும் குடும்ப நல அமைச்சகம்

[B] உள்துறை அமைச்சகம்

[C] நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகம்

[D] வீடமைப்பு மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம்

- ✓ பிப் 5 அன்று வீடமைப்பு மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சரகம் DAY-NULM (Deendayal Antyodaya Mission – National Urban Livelihoods Mission) விரிவுபடுத்த Shehri Samridhi Utsav ஐ அறிமுகப்படுத்தினர்.
- ✓ இந்நிகழ்ச்சி அரசின் முயற்சிகள் மற்றும் சுய உதவிக்குழு(SHG) உறுப்பினர்கள் மூலம் அரசுத்திட்டங்களை மக்களிடையே கொண்டு சேர்க்க வழிவகை செய்யும்.
- ✓ Shehri Samrithi Utsav மூலம் SHG உறுப்பினர்கள் Swachchh Bharat Mission (SBM), Pradhan Mantri Awas Yojana (PMAY), Pradhan Mantri Ujjwala Yojana(PMUY), Pradhan Mantri Jan Dhan Yojana (PMJDY), Pradhan Mantri Suraksha Bima Yojana (PMSBY), Pradhan Mantri Jeevan Jyoti Yojana (PMJJY) மற்றும் National

Nutrition Mission (NNM) போன்ற பல்வேறு அரசு நலத்திட்டங்களை மக்களிடையே கொண்டுசெல்வர். இதனுடன் சுய உதவிக்குழுவின் பொருட்களை விற்பனை செய்யும் தேசிய பொருட்காட்சி மற்றும் தேசிய தெருஉணவு விழா டெல்லியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

6] CPSEs மூலம் SC/ST பிரிவினரை சேர்ந்த தொழில் முனைவோரை ஊக்கப்படுத்தியதற்காக MSME அமைச்சகத்தின் Maniratna பிரிவின் கீழ் விருது வென்ற PSE எது?

[A] SAIL

[B] AAI

[C] NFDC

[D] IRCTC

- ✓ National Film Development Corporation of India (NFDC) நிறுவனமானது MSME அமைச்சகத்தின் Maniratna பிரிவின் கீழ் விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- ✓ MSME அமைச்சகத்தின் முயற்சியின் கீழ் CPSEs ன் பணிகளை பாராட்டுவதற்காகவும், SC/ST பிரிவில் தொழில்முனைவோரை ஊக்கப்படுத்த அவர்கள் செய்த பணிகளை அடையாளப்படுத்துவதற்கும் இவ்விருது வழங்கப்படுகிறது.
- ✓ சம்பந்த் இணையதளத்தில் SC/ST தொழில்முனைவோரின் எண்ணிக்கை அதிகரிப்பு, SC/ST க்கான விற்பனையாளர் முன்னேற்ற நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு, பயனடைந்த SC/ST தொழில் முனைவோர்கள் ஆகியவை வெற்றிக்கு காரணம் என குறிப்பிடப்பட்டுள்ளது. இந்திய சினிமாவின் ஒருங்கிணைந்த முன்னேற்றத்திற்காக இந்திய அரசால் 1975 ஆம் ஆண்டு NDFC உருவாக்கப்பட்டது.

7] அண்மையில் செய்திகளில் காணப்பட்ட Sentinelese Tribe எந்த தீவில் அமைந்துள்ளது?

[A] தெற்கு சென்டினல் தீவு

[B] கொண்டல் தீவு

[C] பொம்புகா

[D] வடக்கு சென்டினல் தீவு

- ✓ North Sentinel Island (NSI) ஆனது Sentinelese பழங்குடி மக்களின் இல்லமாக கருதப்படுகிறது, மேலும் இவ்விடத்தில் வெளி உலக தொடர்பு தொடர்ந்து மறுக்கப்பட்டு வருகிறது. அவர்கள் வெளியாட்களை எதிர்ப்பது மட்டுமல்லாமல் தங்களை அணுகின்றவர்களை கொலை செய்கின்றனர். Sentinelese மக்கள் புதிய கற்காலத்திற்கு முந்தியவர்கள் என்று நம்பப்படுகிறது.
- ✓ அவர்கள் மத்திய கற்கால கால கலாச்சாரத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் பயன்படுத்திய உலோகங்கள், அவற்றின் பயன்பாடு பற்றிய தெளிவான அறிவினை அவர்கள் பெற்றிருக்கவில்லை. குறிப்பாக அங்கு பெரும்பாலனோர் உலோகங்களை ஆயுதங்களாக மட்டுமே பயன்படுத்தினரே தவிர வேறு நோக்கங்களுக்காக பயன்படுத்தவில்லை. சமீபத்தில் உள்துறை அமைச்சகத்தின் சார் அமைச்சர் ஹேன்ஸ்ராஜ் கங்காராம் அஹிர் அவர்கள் இந்த பழங்குடி மக்களைப் பற்றிய செய்தியினை எழுத்துவடிவில் மக்களவையில் வினாவாக எழுப்பினார். ஆகையால் இந்த பழங்குடி மக்களை பற்றிய செய்தி பிரமுகமாக்கப்பட்டது.
- ✓ இந்த பழங்குடி மக்கள் 2011ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி அழிவின் விளிம்பில் உள்ளனர். அவர்களை பாதுகாக்க சட்டங்கள்/விதிமுறைகள் உள்ளனர். இவை UT நிர்வாகத்தினால் கண்டிப்பாக செயற்படுத்தப்பட்டு, கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. இந்த சட்டங்கள்/ஒழுங்குமுறையில் கீழ்க்கண்டவை அடங்கும்.

  (1) A & N தீவுகள் (PAT) ஒழுங்குமுறை,1956

  (2) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) சட்டம், 1989

  (3) Restrictions under Foreigner (Restricted Area) Orders, 1963

  (4) விசா கையேடு நிபந்தனைகள்/பாஸ்போர்ட் சட்டம்,1920 மற்றும்

  5) இந்திய வன சட்டம், 1927 மற்றும் வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டம், 1972.

- ✓ NSI வடமேற்கு செண்டினல் தீவு என்பது அந்தமானில் உள்ள ஒரு தீவாகும். மேலும் இந்த தீவானது வங்காள விரிகுடாவில் உள்ளது. இதில் தென் செண்டினல் தீவும் உள்ளது.

8] 'RAHAT-2019' ஒருங்கிணைந்த HADR பயிற்சி எந்த மாநிலத்தில் நடைபெற்றது?

[A] மத்திய பிரதேசம்

[B] ஜார்க்கண்ட்

[C] ராஜஸ்தான்

[D] உத்தரப்பிரதேசம்

- ✓ ராஜஸ்தான் மாநிலத்தில் இந்திய ராணுவம் சார்பாக ஜெய்ப்பூரை சேர்ந்த சப்த சக்தி தலைமை பிப்ரவரி 11,12 தேதிகளில் ஒருங்கிணைந்த Humanitarian Assistance and Disaster Relief (HADR) 'RAHAT-2019' பயிற்சி நடத்தியது.
- ✓ ஜெய்ப்பூர், கொட்டா, ஆழ்வார் ஆகிய மூன்று பகுதிகளில் இரண்டு நாட்களாக இப்பயிற்சி நடத்தப்பட்டது.
- ✓ மனிதநேய உதவிகள் மற்றும் பேரழிவு மீட்பு நடவடிக்கைகளை ஒருங்கிணைக்க NDMA உடன் இணைந்து பயிற்சி நடத்தப்படுகிறது. ராணுவம், National Disaster Management Response Mechanism (NDMRM), SDMA Rajasthan and DLMAs பிரதிநிதிகள் இப்பயிற்சியில் கலந்து கொண்டனர்.

9] போட்டித்தேர்வுகளில் இருக்கும் தவறான விடைகளுக்கு மதிப்பெண்களை குறைக்கும் முறைக்கு (Negative Marking System) எதிராக ஆணையிட்ட உயர்நீதிமன்றம் எது?

[A] டெல்லி உயர்நீதிமன்றம்

[B] கல்கத்தா உயர் நீதிமன்றம்

[C] மதராஸ் உயர்நீதிமன்றம்

[D] பாம்பே உயர்நீதிமன்றம்

- ✓ மெட்ராஸ் உயர்நீதி மன்றம் IIT போன்ற நிறுவனங்கள் நடத்தும் நுழைவு தேர்வில் மாணவர்கள் தோல்வியுற காரணமாக இருக்கும் மதிப்பெண்களை குறைக்கும் முறை (Negative Marking) சட்டத்திற்கு எதிரானது என ஆணையிட்டுள்ளது.
- ✓ தவறான விடைகளுக்கு மதிப்பெண்களை குறைக்கும் முறை மாணவர்களின் அறிவார்ந்த ஊகித்தலுக்கு தீமை விளைவிப்பதாக நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.
- ✓ IIT JEE க்கு பயின்ற S.நெல்சன் பிரபாகர் (தாழ்த்தப்பட்ட இனத்தை சேர்ந்த மாணவன்) 2013ல் போட்ட வழக்கு இப்போது முடிவுக்கு வந்துள்ளது.

10] சமீபத்தில் செய்திகளில் காணப்பட்ட 'தக்ஷாயனி' என்பது?

[A] விண்வெளி மையம்

[B] நோவல்

[C] விலங்கு

[D] மத மதச்சார்புள்ள மரபு

- ✓ பிப்5, 2019 அன்று தக்ஷாயனி என பெயர் கொண்ட 88 வயதான பெண் யானை ஒன்று கேரளாவின் திருவனந்தபுரத்தில் இறந்தது.
- ✓ தக்ஷாயனி ஆசியாவின் பிடிபட்ட யானைகளில் வயது முதிர்ந்ததாகும். கின்னஸ் சாதனையும் படைத்துள்ளது. 'Gaja Muthassi' (யானைகளின் பாட்டி) எனவும் அழைக்கப்படுகிறது.
- ✓ தபால்துறை அந்த யானைக்கு தபால் உறை வெளியிட்டுள்ளது. திருவனந்தபுரத்தின் செங்கலூர் மஹாதேவா கோயிலில் கடந்த 70 வருடங்களாக வசித்து வந்தது.

winmeen.com